# Gospel Truth

## காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 20 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 20


## கர்த்தருடைய நாள்

இயேசுகிறிஸ்துவின் அன்பான சீஷன் யோவான் பத்முதீவில் இருந்தபோது, இவ்வாறு எழுதுகிறார் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன் ; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன் (வெளி 1 : 10). இந்த ஆச்சரியமான நிகழ்வு யோவானுக்கு வெளிப்படுத்தப் பட்டது.கர்த்தருடைய நாள் என்பது வாரத்தின் முதல்நாள் அதாவது ஞாயிற்றுக்கிழமை.

வாரத்தின் கடைசிநாளான சனிக்கிழமை, யூதர்களுக்கு முக்கியமான நாள்.ஏனெனில் அவர்கள் பழைய ஏற்பாட்டின் மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு உட்பட்டு, ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக ஆயத்தப்படும் நாள்.ஆனால் இயேசுகிறிஸ்துவின் பிறப்பினிமித்தம் கிறிஸ்தவர் களாகிய நாம் பழைய உடன் படிக்கையின் கட்டளைகளுக் குட்பட்டு கிரியை செய்ய வேண்டிய தில்லை.கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய நாள் என்று சொல்லப்படுகிற ஞாயிற்றுக் கிழமைகளில் வழக்கமாக கூடிவந்து ஆராதிப்பதை வழக்கமாக வைத்துள்ளனர்.


இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு மரித்து, உயிர்த் தெழுந்த நாள் வாரத்தின் முதல் நாள். ஆகவே ஞாயிற்றுக் கிழமைக்கு கிறிஸ்தவர்கள் இன்னும் முக்கியத்துவம் தருகின்றனர்.

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்திற்கு வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு, உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல், கலக்கமடைந் திருந்தார்கள் (லூக் 24 : 1-3).

ஞாயிற்றுக்கிழமைக்கு இன்னும் மிக முக்கியமான ஒன்று பெந்தேகொஸ்தே நாள். ஏனெனில் அன்றுதான் சீஷர்கள் பரிசுத்த பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டார்கள் (அப்போ 2 : 1-4). சீனாய் மலையிலே பெறப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் பதினைந்து நாட்கள் கொண்டாடப்படுகிறது.இந்த

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்தார். அதன்பின்பு பெந்தெகொஸ்தே நாள் வந்தது.இவ்வாறாக பரிசுத்த ஆவியானவர் ஜனங்களுடைய இருதயத்திலே தேவனுடைய நியாயப்பிரமாணத்தை முத்திரை போட்டார்.

ஆகவேதான் ஞாயிற்றுக்கிழமை என்பதை நமக்கு ஆராதனை கூடுகைக்கான ஒரு பெரியநாளாக கருதுகிறோம்.வாரத்தின் முதல்நாள் மற்றும் ஓய்வுநாள் ஆசரிப்பு என்று கடமைக்காக அல்ல.



**ஞாயிற்றுக்கிழமை என்பது விசுவாசிகளுக்கு மிகவும் விசேஷித்த நாள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நாள் வாரத்தின் முதல்நாள்.**


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | ஒருநோக்கு செய்தி | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 - 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 :15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**

உறுதியான அதன் முக்கியத்துவத்தை குறித்தே மேன்மை பாராட்டக்கடவோம். வேதத்தின் அடிப்படையில், ஆதி அப்போஸ்தல சபைகளில் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகள் வழக்கமாயிருந்தது.வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டியிருந்தது. அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தார் (அப்போ 20 : 7).

1 கொரி 16 : 1-2 ல் பவுல், பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள்.நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் என்றார்.பழைய ஓய்வுநாள் ஆசரிப்பு பின்பற்றப்படுவதற்கு நேர்மாறாக ஞாயிற்றுக்கிழமைகளில் காணிக்கை சேகரிப்பு இருந்தது. மேலும் பரிசுத்தவான்கள் ஒன்றுகூடி ஆராதிக்கும் ஆராதனையும் அன்றையதினமே இருந்தது.

சபையாக ஞாயிற்றுக்கிழமைகளிலே, அதாவது கர்த்தருடைய நாளிலே ஆராதனை இயேசுகிறிஸ்துவின் நாட்களில் பின்பற்றப்பட்டது.வேதத்தில் ஆதாரமான வசனங்கள் இல்லா விடிலும், சபைகூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம் (எபி 10 : 25) என வசனம் உள்ளது.

ஞாயிற்றுக்கிழமையைத் தவிர மற்ற நாட்களிலும் சபை கூடிவந்து ஆராதிக்கலாம்.ஆனால் சனிக்கிழமை ஓய்வுநாள் ஆசரிப்பு செய்யும் கூட்டத்தாரும் நம்மிலே உண்டு.கடந்துபோன சட்டதிட்டங்களின் நீதிக்கு உட்பட்டு அவர்கள் அதை பின்பற்றுகிறார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் மாம்சீகமான கடமைகளையே செய்கிறார்கள்.விலையேறப்பெற்ற சத்தியத்தையும், நீதியையும் செய்ய தவறுகிறார்கள்.

சில கிறிஸ்தவர்கள் சனிக்கிழமையில் கூட்டங்கூடுகிறார்கள்.இன்னும் சில முஸ்லீம் நாடுகளில் கூட வேறு வேறு நாட்களில் சபைகூடி வருதலை நியமித்திருக்கிறார்கள்.எப்படியாயினும் கர்த்தருடைய நாளின் மகத்துவத்தை ஒவ்வொருவரும் அறிந்து வாஞ்சையோடு பங்கெடுக்க வேண்டும்.

## காஸ்பெல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். பொள்ளாச்சி தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது.ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான் – எபிரெயர் 4 : 9-10.

கிறிஸ்துவுக்குள் இளைப்பாறுவது என்பது மகிமையே.கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வழியாக, தேவசமாதானம் நம் யாவருக்குள்ளும் கிரியை செய்யட்டும். நம் வாழ்வின் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் தாண்டி தேவபிள்ளைகளுடைய இருதயத்திலே தேவன் உறுதியாக, ஆழமாக வாசம் பண்ண நாம் பாத்திரவான் களாயிருக்க வேண்டும். இது நம்முடைய சுய முயற்சிகளினாலோ அல்லது நீதியினாலோ உண்டாகாது மாறாக தேவகுமாரனாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையினாலே ஆகும்.

மனுக்குலத்தோடு தேவன் செய்த இருவேறு உடன்படிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இதழ் 18 ல் பார்த்தோம்.இந்த இதழில் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டும் என்பதைக் குறித்துக் காண்போம். பழைய ஏற்பாட்டின் பத்துக் கற்பனைகளில் ஒன்றான இக்கட்டளையை பின்பற்ற வேண்டும். கிறிஸ்துவுக்குள் இளைப்பாறுதல் அடையப்போகிற நாம் மாம்சீகமான, சடங்காச்சாரமான ஒழுங்குகளை அடிப்படையாகக் கொள்ளகூடாது.

ஓய்வுநாள் அநுசரிப்பு என்பது உலகளாவிய ஜனங்களின் பாரம்பரிய பின்பற்றுதலாகும். சனிக்கிழமை ஆராதனை கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டது என்கின்றனர்.துரதிஷ்டவசம் என்னவெனில் உண்மையான ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது எங்கேயும் இல்லை.கிறிஸ்தவர்களுடைய சபைப்பிரிவினருக்கிடையே தேவசத்தியத்துக்கு கீழ்ப்படிகிறவர்களைவிட ஓய்வுநாள் ஆசரிப்புக்கு முக்கியத்துவம் தருகிறவர்களே அதிகம். பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கையின் பிரகாரமாக ஏற்படுத்தப்பட்ட ஓய்வுநாள் ஆசரிப்பை விட மிக மேலான பரிசுத்தமும், கர்த்தருக்குள் இளைப்பாறுகிற மகிமையும் பெரிது.

இன்றும் ஓய்வுநாள் ஆசரிப்பு செய்யும் சபைகளில் சனிக்கிழமையை ஓய்வுநாளாக கடைபிடிப்பவர்கள் கர்த்தருடைய நாள், ஏழாம்நாள் என பழையஏற்பாட்டு முறைகளை பின்பற்றுகிறவர்களாயிருப்பின், பலியிடுதல், பண்டிகை நாட்கள் இவையெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்றும் பழையஏற்பாட்டிலே போதிக்கப்பட்டுள்ளது.மேலும் ஓய்வுநாட்களை பரிசுத்தமாய் ஆசரித்த இஸ்ரவேல் ஜனங்கள் எந்தவொரு வேலையையும் அன்றையதினம் செய்யாமல் தங்களுடைய இடத்திலே இருக்க வேண்டும்.அப்படியானால் இப்போதும் ஏழாம்நாள் ஆசரிப்பு கடைபிடிப்பவர்கள் இவைகளையும் செய்கிறார்களா? ஆகவே நாம் பழையஏற்பாட்டிலே ஒருசிலவற்றை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அதனை வழக்கப்படுத்துவது தவறான கொள்கை. பலவிதமான காரியங்கள் பழையஏற்பாட்டின் வழியாக நாம் கற்றுக்கொண்டாலும் கூட, புதிதாய் பெறப்பட்ட புதுஉடன்படிக்கை வழியாக பல ஆவிக்குரிய காரியங்களை கற்றுள்ளோம்.

ஆராதனை முறைமைகள், கருத்து வேற்றுமைகள் மாறும்போது எதிரியானவன் பலத்து கொள்ளுகிறான்.கர்த்தருடைய பரிசுத்தவான்களில் பலருக்கு இன்று சபைகூடிவந்து ஜெபிப்பதற்கு நேரம் இல்லாத ஒரு நிலை உள்ளது.சபையின் வருகை விழுக்காடு அவரவருடைய வேலையை பொறுத்து மாறுபட்டுக் கொண்டே போகிறது.கர்த்தர் தருகிற இளைப்பாறுதலையும், அவருக்கு ஆராதனை செய்ய வேண்டியதையும் நாம் மறந்து போகக் கூடாது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் நாம் அடையப்போகிற இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஆயத்தமாவோம். தேவனுடைய நீதியினாலே நாம் பிழைத்திருக்கிறபடியால் நாம் அவரை கிட்டிச் சேருவோம்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

# வேதாகம வழிகாட்டி : ஓய்வுநாள்

**வேத வாசிப்பு :** ஆகையால் போஜனத்தையும், பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும், மாதப் பிறப்பையும், ஓய்வுநாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக.அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது.அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது – கொலோ 2 : 16–17.

**விளக்கம் :** ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது பழைய உடன்படிக்கையில் சொல்லப்பட்ட காரியம்.ஒரு நாளை ஓய்வுநாள் ஆசரிப்பு என நியமித்த ஒழுங்கானது புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்துவின் மூலமாக பூரணமாய் நிறைவேறிற்று. தேவஜனங்கள் ஒவ்வொரு நாளும் தேவனுக்குள் பரிசுத்தமாய் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்

**I.மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஓய்வுநாள்**

A. யாத் 16 : 22 –30 ஓய்வுநாள் கடைபிடித்தல்

B. யாத் 20 : 8 –11 சீனாய்மலையில் கொடுக்கப்பட்ட கட்டளை

**II.மோசேயின் நாள் வரை ஓய்வுநாள் ஆசரிப்பு இல்லை**

A. நெகேமியா 9 : 14 மோசேயின் மூலமாய் தெரியப்படுத்தினார்

B. உபாக 5 : 15 எகிப்து தேசத்தின் அடிமைத்தனத் திலிருந்து விடுதலையானபின்பு

**III.ஓய்வுநாள் காரணங்கள்**

A. யாத் 23 : 12 ஓய்ந்திருப்பாயாக

B. யாத் 20 : 11 படைத்தவரை நினைவுகூர

C. உபா 5 : 12–15 எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதை நினைவுகூர

D. லேவி 23 : 3–8; (19 :30) ஆராதனையின் நேரம்

**IV.மீறினால் தண்டிக்கப்படுவர்**

A. யாத் 31 : 12–17(35:2–3) ஓய்வுநாளில் வேலை செய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்

B. எண் 15 : 32–36 ஓய்வுநாளில் விறகு பொறுக்கின ஒரு மனிதனை கல்லெறிந்தார்கள்

C. நெகே 13 : 17–19 யூதர்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தகுலைச்சலாக்கினார்கள்

**V.யூத ஜனங்களுக்கான உடன்படிக்கை**

A. யாத் 31 : 17கர்த்தருக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் அடையாளமாயிருக்கும்.

**VI.பழைய உடன்படிக்கை நிலைநிற்கவில்லையே**

(இதழ் 18 ஐ பார்க்க)

A. எபி 8 : 8–9, 13 மோசேயின் நியாயப்பிரமாணம் நிலைநிற்கவில்லையே (எரே 31 : 31–32)

B. லூக் 16 : 16 நியாயப்பிரமாணம் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது.

C. கலா 3 :11–13 நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை

D. ரோமர் 6 : 14 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் (ரோமர் 7 : 6)

E. அப்போ 15 : 5, 24, 28–29 நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி, உங்களைக் கலக்கி

**VII.இயேசுவும், ஓய்வுநாளும்**

A. மத் 12 : 1–8 ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து சாப்பிட்டதை தேவன் இயேசு நியாயப்படுத்தி பேசினார்.

B. மாற் 2 : 27 மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார் என்றார்

C. மத் 12 : 9–14 ஓய்வுநாளில் நன்மைசெய்வது நியாயந்தான் என்று சொன்னார் (யோவான் 5 :8,9)

**VIII.கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள்**

A. எபி 10 : 1 நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால்

B. மத் 5 : 17 நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதற்கே வந்தார் இயேசு

C. ஏசாயா 11 : 10 அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்

D. எபி 4 : 1–11 தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது.

E. மத் 11 : 28 இயேசுவே உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறவர்

F. கொலோ 2 : 16–17 ஓய்வுநாட்களைக் குறித்து, ஒருவனும் உங்களை குற்றப்படுத்தாதிருப்பானாக

G. லூக் 1 : 74–75 ஒவ்வொருநாளும் பரிசுத்தம்

**IX.கர்த்தருடைய நாள்**

A. வெளி 1 : 10 கர்த்தருடைய நாள்

B. லூக் 24 : 1 (மத் 28 : 1) வாரத்தின் முதல்நாளிலே கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்

C. அப்போ 2 : 1 பெந்தெகோஸ்தே நாள் ஞாயிற்றுக்கிழமை

D. 1 கொரி 16 : 1–2 (அப்போ 20 : 7) கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலே சபைகூடி ஆராதனை செய்கிறதற்காக


**முடிவு :**

இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும்,வெறுமையானதுமான அவ்வழிபாடு களுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப் படும்படி விரும்புகிறதெப்படி? நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும்பார்க்கிறீர்களே – கலா 4 : 9–10.



# ஓய்வுநாள்

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக (யாத் 20 : 8). சீனாய் மலையிலே கர்த்தர் மோசேக்கு கொடுத்த 10 கட்டளைகளில் ஒன்று. அதாவது வாரத்தின் கடைசிநாளான சனிக்கிழமையானது பழைய ஏற்பாட்டின்படி கர்த்தருக்கு ஆராதனை செய்ய பரிசுத்தமாக வேண்டிய நாள். கர்த்தருடைய ஜனங்கள் ஆறுநாட்களும் வேலை செய்வார்கள் ஆனால் ஏழாவது நாள் எந்த வேலையும் செய்யாமல் அது கர்த்தருக்கென்று ஆசரிக்க வேண்டிய ஓய்வுநாள்.



**தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து, ஏழாம்நாள் ஓய்ந்திருந்தார் ஆனால் பின்நாட்களில் பின்பற்றப்பட வில்லை**

**ஓய்வுநாளின் துவக்கம்**

முதலாவது ஒய்வு நாள் ஆசரிப்பு என்பது இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத் திலிருந்து விடுதலையாக் கப்பட்டபின்பு தேவன் வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப் பண்ணினபோது காண முடிகிறது .ஏனெனில் ஆறாம் நாளில் தலைக்கு இரண்டு ஓமர் வீதமாக இரண்டத்தனையாய் ஆகாரம் சேர்த்தார்கள நாளைக்கு கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வு நாளாகிய ஓய்வு (யாத் 16 : 22 -30). ஆகையால் கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதை பரிசுத்தமாக்கினார் (யாத் 20 : 11).

**மோசேயின் நாளைக்கு முன்பு வரை கடைபிடிக்கப்படவில்லை**

மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு முன்புவரை ஓய்வு நாள் ஆசரிக்கப்பட்டதற்கான எந்தவொரு ஆதாரமும் நமக்கு வேதாகமத்திலே இல்லை. ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கும் முன்பாக ஓய்வு நாள் ஆசரிப்பு இருந்ததில்லை. நோவாவும் ஆபிரகாமும் விசுவாசத்திலே ஜீவித்ததால் தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்தது. ஆனால் அவர்கள் சனிக்கிழமையை ஓய்வுநாளாக கடைபிடிக்கவில்லை கர்த்தராகிய தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (ஆதி 2 : 3). பரிசுத்த ஓய்வுநாள் என்பது இஸ்ரவேல் ஜனங்களுக்காக மோசேயின் கையில் கொடுக்கப்பட்டது (நெகே 9 : 14) . ஆகவே தான் இஸ்ரவேலர்கள் எகிப்தின் அடிமைத் தனத்தில் இருந்து விடுதலை யடைந்தபின் இது கட்டளையிடப்பட்டது (உபா 5 : 12 – 15).

**ஓய்வு நாளின் நோக்கம்**

ஓய்வுநாள் என்பது கர்த்தராகிய தேவன் கட்டளையிட்ட பல காரணங்களுக்காக ஒப்புவிக்கப்பட்டது மனிதனுக்கும் மிருகங் களுக்கும் ஓய்வுநாள். ஆறு நாட்கள் உன் வேலையை செய்து ஏழாம் நாளிலே உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந் திருப்பாயாக (யாத் 3 : 12). வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவரை நினைவு கூருவதற்கான நாள் (யாத் 20 : 11). நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப் பண்ணினார் என்றும் நினைப்பாயாக; ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார் (உபா 5 : 15). ஏழாம்நாள் பரிசுத்த சபை கூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்ய வேண்டாம் (லேவி 23 : 3-8).

**தண்டனைக்குரிய சட்டம்**

ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டியது யூதர்களுக்கான பரிந்துரையோ அல்லது யோசனையோ கிடையாது.மாறாக அது தேவனுடைய கட்டளை.ஆகவே மீறுபவர்கள் தண்டிக்கப்படுவர். ஓய்வுநாளை பரிசுத்தக் குலைச்சலாக்குகிறவன் கொலையுண்ணக்கடவன்... ஓய்வுநாளில் வேலைசெய்கிறவன் எவனும் கொலை செய்யப்படக்கடவன் (யாத் 31 : 14-15). ஆசரிப்பு கூடாரத்தைக் கட்டும் பணியைச் செய்கிற இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தர் சொன்ன கடினமான வார்த்தை இது.

வேலைப் பழுவினால் ஏழாம்நாள் ஆசரிப்பை அவர்கள் மறந்துபோய் விடக் கூடாது என கர்த்தர் எண்ணினார். ஓய்வுநாளில் உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் நெருப்பு மூட்டாதிருப்பீர்களாக என்னும் இவ்வார்த்தைகளைக் கைக்கொள்ளும்படி கர்த்தர் கட்டளையிட்டார் (யாத் 35 : 2-3). இந்த வார்த்தைகள் யூதர்களால் புரிந்துகொள்ளப்பட்டு, கைக்கொள்ளப்பட்டது.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் இருக்கையில் ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார்கள்.அந்த மனிதன் நிச்சயமாய் கொலைசெய்யப்பட வேண்டும் என்று சொல்லி பாளயத்திற்கு புறம்பே கல்லெறிந்தார்கள் (எண் 15 : 32-36). அவனுடைய பாவம் அறியாமையினால் அல்ல, தேவனுடைய கட்டளையை மீறினதினால் அவன் தண்டிக்கப்பட்டான்.

**ஓய்வுநாளை பரிசுத்தகுலைச்சலாக்கினார்கள்**

யூதாவின் பெரியவர்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தகுலைச்சலாக்குகிற இந்த பொல்லாத செய்கையை நெகேமியா கண்டு எருசலேமின் பட்டண வாசலில் கதவுகளைப் பூட்டவும் கட்டளையிட்டதினால் (நெகே 13 : 17 – 19), வர்த்தகரும், சகலவித சரக்குகளை விற்கிறவர்களும், இரண்டொருதரம் எருசலேமுக்குப் புறம்பே இராத்தங்கினார்கள். ஜனங்கள் எப்போது ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்காமற்போனார்களோ அப்பொழுதே தேவனை ஆராதிப்பதையும் மறந்துபோய் பிசாசின் தந்திரங்களினால் பிடிபட்டார்கள். இந்த நியாயப்பிரமாணசட்டத்தின் நோக்கம் என்னவெனில் இந்த பரிசுத்தநாளில், உலக சம்பாத்தியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்ககூடாது.ஆசரிப்பு என்பது அடிமைத்தனமல்ல. மாறாக அது ஒரு மனமகிழ்ச்சியான, உற்சாகமான, இரக்கமும், நினைவுகூருதலுமான ஆராதனைநாள்.

**பழைய உடன்படிக்கையை சார்ந்தது**

புதிய உடன்படிக்கை பெறப்படும் வரையிலும் பழைய உடன்படிக்கையில் சொல்லப்பட்ட ஓய்வுநாள் ஆசரிப்பு கடைபிடிக்கப்பட்டது



**கிறிஸ்துவே நம் ஓய்வுநாள் அவருடைய இளைப்பாறுதல் மாம்சீகமான ஒரு நாள் ஆசரிப்பிற்கும் அப்பாற்பட்டது**

எரேமியா 31 : 31 : 32 ல் தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்டு எபி 8 : 8-9, 13 ல் இதோ கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில் : இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புதுஉடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்;

**கிறிஸ்து தருகிற ஆத்தும இளைப்பாறுதல்**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையினால், பழைய உடன்படிக்கையானது செயல்படுத்தப்படவில்லை நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின (யோவான் 1 : 17). நீங்கள் நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டி ருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது (ரோமர் 6 : 14).கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார் (கலா 3 : 10-13). நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, உங்களைக் கலக்கி... (அப்போ 15 : 5, 24-29) அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது.

**ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது கிறிஸ்துவால் மீண்டும் வலியுறுத்தப் படவில்லை**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய போதனைகளில் அவர் பல கற்பனைகளை திரும்பதிரும்ப வலியுறுத்தி சொல்லி யிருக்கிறார் (மாற்கு 10 : 19). இயேசு ஓய்வுநாளிலே பயிர்வழியே போனார்.அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து, தின்னத் தொடங்கினார்கள் (மத் 12 : 1). மேலும் இயேசுகிறிஸ்து ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவது நியாயந்தான் என்று சொன்னார் (மத் 12 : 9-14). வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷனை, அவனுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்று சொல்லி அவனை இயேசு குணமாக்கிய நாள் ஓய்வுநாளே(யோவான் 5 : 8-11).இயேசு அவர்களை நோக்கி : மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது (மாற்கு 2 : 27). தேவனுடைய குமாரனும் மத்தியஸ்தருமாகிய இயேசுகிறிஸ்து ஓய்வுநாளின் பாரம்பரிய வழக்கங்களில் மாற்றம் செய்தார்.

**பழைய உடன்படிக்கையை பற்றிக் கொண்டிருத்தல்**

பல ஜனங்கள் இன்றும் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க மறப்பதில்லை. ஆனால் வேதம் சொல்லுகிறது இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைக ளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிற தெப்படி? நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே(கலா 4 :9-10).

ஆகையால் போஜனத்தையும், பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும், மாதப்பிறப்பையும், ஓய்வுநாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களை குற்றப்படுத்தா திருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது (கொலோ 2 : 16-17).

**கிறிஸ்துவே நம் ஓய்வுநாள்**

ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது ஒருவரை நீதிமானாக்குகிறதில்லை.மாறாக அது வழக்கமான கடைபிடித்தலே.புதிய ஏற்பாட்டிலே தியாகம், சடங்கு, சம்பிரதாயங்கள், தகனபலி,பலிபீடம் இவையெல்லாம் கடந்துபோய் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எல்லாம் நிறைவேறிற்று. ஆனபடியினாலே அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற் கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்ககடவோம் (எபி 4 : 1-11).

உண்மையான இளைப்பாறுதல் நமது மாம்சீக முயற்சிகளினால் உண்டாகாது.கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் பலன் நமக்கு நீதியாக எண்ணப்படும். கிருபையினாலே பெறப்பட்ட மகிமையுள்ள இளைப்பாறுதல்.அதை நாம் பெற்றுக் கொள்ளும்படியாய் தேவபிள்ளைகளாகிய நம்மை அவர் அழைக்கிறார்.வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11 : 28).

**உண்மையான ஓய்வுநாள் ஆத்ம இளைப்பாறுதல்**

மாம்சீகமான ஓய்வுநாள் ஆசரிப்பு ஒருநாள் தேவனை தொழுதுகொள்வது அல்ல, மாறாக ஒவ்வொரு நாளும் பரிசுத்தமும், நீதியும், தேவனுக்குப் பிரியமுமான வாழ்க்கை வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும்படிக்கு தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார் (லூக் 1 : 74-75).

உண்மையான கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியோட பரிசுத்தமாய் வாரத்தின் ஒவ்வொரு நாளும் ஆசரிக்கப்பட வேண்டும்.

# கேள்விக்கு என்ன பதில்?

**தங்கள் தலைமுறை தோறும் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டுமென்று ஏன் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ?**

யாத் 31 : 16-17 – ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாய் ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக் கடவர்கள்.அது என்றென்றைக்கும் அடையாளமாயிருக்கும்.

ஆகவே இந்த ஓய்வுநாள் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கும் தேவனுக்குமான ஓர் நியதி. அதுபோலவே விருத்த சேதனம், பஸ்கா ஆசரிப்பின் அப்பம் சுடுதல், லேவியர்களின் ஆசாரியத்துவப் பணி என இவையாவும் நீடித்தது. என்றென்றைக்குமான நித்திய உடன்படிக்கையாக அல்ல. ஓய்வுநாள் ஒழுங்குமுறை, மற்ற பழைய ஏற்பாட்டின் ஆசரிப்புகள் இவையாவும் ஒரு புதிய உடன்படிக் கையாகிய புத்தகம் ஏற்படுத்தப்படும் வரை சாசனமாக கடைபிடிக்கப்பட்டு வந்தது. அதற்கு ஒப்புமையான வேறொரு கட்டளை கொண்டு வரப் பட்டபின் பழைய உடன்படிக்கை வலிமையற்றுப் போனது.சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து... பகையைச் சிலுவையினால் கொன்று.. இரு திறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசி 2 : 11-18).

**ஞாயிற்றுக்கிழமை வேலை செய்வது தவறா?**

நாம் பழைய நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. அதினின்று கிறிஸ்து நம்மை விடுதலையாக்கினார். மேலும் கிறிஸ்தவர்கள் பாரம்பரியமாகவே ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனை செய்வதை வழக்கப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

ஆயினும் அது நியாயப்பிரமாணத்தைச் சார்ந்ததல்ல. ஏனெனில் நாம் புது உடன்படிக்கையின் பாத்திரவான்கள். நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது (கலா 3 : 24-25). ஆகவே நாம் இன்னும் நியாயப் பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டிருக்கவில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் சபை கூடி வருதல் இருப்பதாலும், நாம் ஆறு நாட்களும் வேலை செய்வதாலும், அந்த ஒருநாள் நம் ஆவி, ஆத்துமா, சரீரம் புத்துயிர் பெற ஓய்வு அவசியமாகிறது. ஞாயிறு என்று கட்டாயமில்லை, ஓய்வு என்பது பல தரப்பட்ட நிலைகளில் வேலை செய்யும் அனைத்து தரப்பி னரும் ஒருநாள் தங்கள் வேலைகளை விட்டு விட்டு, தேவனுக்காகவும் சபை ஆராதனைக்கும்,குடும்பத் திற்கும் தம் நேரத்தை செலவிடலாம்.

ஜனங்கள் எப்போதும் சுயாதீனத்தை மாம்சத்திற் கேதுவாகவே அநுசரிக் கிறார்கள் (கலா 5 : 13). ஞாயிறு என்பதும், ஆராதனை என்பதும் பலருக்கு அவசர அவசரமாக முடிந்துவிட்டால், தன் வேலைகளைச் செய்ய ஏதுவாகும் என்று எண்ணி கடமைக்காக ஆராதனைக்குச் செல்பவர்கள் அநேகர். தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள், தங்களுடைய விசுவாசிகளோடு சேர்ந்து கர்த்தரை ஆராதிக்க நேரத்தை ஒதுக்கவும், அவ்வேளையில் பிற காரியங்களில் கவனம் செலுத்துவதை விட்டுவிட வேண்டும்.நாம் நியாயப் பிரமாணத்தின்படியல்ல,அதன் அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப் பட்டிருப்பதால் , ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அடையும் படியாக நம் வேலைகளை தவிர்த்து தேவனை ஆராதிக்க கடமைப்பட்டுள்ளோம்.

| மோசேயின் ஓய்வுநாள் | கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள் |
|---|---|
| சடங்காச்சாரமான சம்பிரதாயம் | ஆவிக்குரியது |
| மாம்சீக ஓய்வு | ஆத்தும இளைப்பாறுதல் |
| ஏழாவது நாள் பரிசுத்தம் | ஒவ்வொரு நாளும் பரிசுத்தம் |
| உலகப்பிரகாரமான வேலையினால் பரிசுத்தகுலைச்சலாக்கப்படுகிறது | வேலைசெய்தாலும் /செய்யா விட்டாலும் அந்த நாள் பரிசுத்தமோ ( அ ) பரிசுத்தகுலைச்சலோ ஆகாது |
| உடல் உழைப்பிலிருந்து ஓய்வு | எல்லா பாவகாரியங்களிலிருந்தும் விலகுதல் |
| ஓய்வுநாளில் வேலைசெய்கிறவன் கொலைசெய்யப்பட வேண்டும் | பாவம் செய்த ஆத்துமா மீட்பை இழந்து அழிந்து போகும் |
| தற்காலிகமான ஆசீர்வாதம் | ஆவிக்குரிய ஆசீர்வாதம் |
| வருகின்றவைகளின் நிழலாய் இருக்கிறது. | பூரணமாய் நிறைவேறும். |

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY




### இரண்டாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் கூற்றுகள்

*புது உடன்படிக்கையின் மூலம் நாம் நிரந்தரமான ஓய்வுநாள் கடைபிடிக்க வலியுறுத்தப் படுகிறோம். எப்படியிருப்பினும் ஒருநாள் நீங்கள் சும்மாயிருப்பதினால், அதை கர்த்தருக்கென்று செலவிடுங்கள் – ஜஸ்டின் மார்டியர், 160* AD

***வேதாகமத்திலே அநேக நீதியுள்ள, பரிசுத்த மனுஷர்கள் (ஆதாம், ஆபேல், ஏனோக்கு, லோத், மெல்கிசேதேக்கு) ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை எனினும் கர்த்தருக்குப் பிரியமாய் வாழ்ந்தார்கள் – ஐஸ்டின் மார்டியர், 160*** AD

*எப்படி மாம்சீகமான விருத்தசேதனமும், பழைய உடன்படிக்கையின் கட்டளைகளும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முழுநிறைவாக பின்பற்றப்பட்டு இப்போது கடந்து போனதோ, அதேபோலதான் ஓய்வுநாள் ஆசரிப்பும் தற்காலிகமானதே –தெர்துலின் 197* AD

*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

## இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டிருங்கள்

என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள் – யோவான் 15 : 4.

உண்மையான ஊழியத்திலே நேரமும், தியாகமும் கர்த்தருக்காய் அதிகமதிகமாய் நாம் செலவுசெய்ய வேண்டியிருக்கும். மாம்சீகமாகவும், உணர்வுபூர்வமாகவும் நமது சரீரமும் பெலவீனமடையலாம்.ஊழியத்தின் பாதையில் பல ஆண்டுகள் கழித்தபிறகும், ஒரு ஞானமுள்ள, கனம் பொருந்திய தேவமனிதர் தன் நேர்மையின் முகத்தையே காண்பிக்கிறவறாக இருக்க வேண்டும்.

மற்ற பல ஊழியர்கள் நல்லொழுக்கத்தை போதிக்கிறவர்களாயிருந்தும், ஆழமான ஆவிக்குரிய ஜீவியமும், தேவஅபிஷேகமும் இல்லாத ஊழியம் மலடானதும், சாதாரண வேலையுமாகவே எண்ணப்படும்.



தேவசித்தம் பெற்ற நிறைவான, பரிபூரணமான ஊழியம் என்பது சொந்த திறமையினால் வருவதல்ல. மாறாக தேவனோடு உள்ள ஐக்கியத்தின் வழியாக கிறிஸ்துவுக்குள் வளர்ந்து பெருகுவ தேயாகும். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு போதித்தது யாதெனில் என்னில் நிலைத்திருங்கள் – என்னை பின்பற்றுங்கள், என்னோடு ஜீவியுங்கள், என் பாதைகளில் நடவுங்கள். மேலும் அவரோடு என்றென்றும் நிலைத்தி ருக்கவே அவர் விரும்புகிறார்.

தேவனுடைய ஜனங்களும், கர்த்தருடைய உன்னதமான ஊழியப்பணியை செய்கிற தேவதாசர்களும் மிக முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டிய ஒன்று ஊழியப்பாதையில் பல காரியங்கள் இருப்பினும், கிறிஸ்துவோடு உள்ள நம்முடைய தனிப்பட்ட ஐக்கியம் குறைந்து போய்விடகூடாது.எதிரியான பிசாசானவன் தந்திரமாய் இந்த ஐக்கியமில்லாத தன்மையை பயன்படுத்தி உள்ளே நுழைந்து பகையை உண்டாக்கி விடுவான்.ஆகவே எச்சரிக்கையாயிருங்கள்.

ஊழியத்தின் பாதையிலே, பல மனஅழுத்தங்களும், உடல் சோர்வும் ஏற்பட்டாலும் கூட, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் நெருங்கி அவரோடு கிட்டிச் சேருங்கள். தனிப்பட்ட நம்முடைய நேரத்தை கர்த்தருக்காய் செலவிடுங்கள். உங்களை அவரோடு இணைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நிரம்பி வழிகிற அனுபவத்தை பெற்றால்தான், தேவஜனங்களை அபிஷேகத்தோடும், பரிசுத்தஆவியின் வல்லமையோடும் தேவனுடைய பாதையில் வழிநடத்திச் செல்லமுடியும்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.VEDHA, CHURCH OF GOD, 2/227 KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316